இணைப்பு III

(90 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2015–2016

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்" – குறள் 388

*மக்களின் உயர்வை மட்டுமே உள்ளத்தே நிறுத்தி, நீதி பிறழாது முறை வகுத்து ஆள்பவரை இறைவன் என மண்ணுலகு போற்றும் என்ற தமிழ்த் திருமறையாம் திருக்குறள் வழி நின்று, திண்ணிய கொள்கையுடன் திறம்பட ஆட்சி செய்யும் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் தடம் பற்றி தளராத உறுதியுடனும் தாளாத நெறியுடனும் காலத்திற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை வியக்கத்தக்க எழுச்சியுடன் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.*

ஆக்கமும் நோக்கமும்

தமிழக அரசின் தலைமைச் செயலகமான புனித ஜார்ஜ் கோட்டையில், அரசின் அரசிதழ்களை அச்சிடும் நோக்கோடு, 1831 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாள் பத்து பணியாளர்களுடன் சிறிய அளவில் ஆக்கப்பெற்ற அச்சகமானது, கடந்த 183 ஆண்டுகளில் ஊக்கமுற வளர்ந்து சென்னையில் இத்துறைக்கான இயக்ககம், மைய அச்சகம், சென்னை உயர் நீதிமன்றக் கிளை அச்சகம் மற்றும் எழுதுபொருள் அலுவலகம் ஆகியவற்றுடன் மாநிலம் தழுவிய 6 கிளை அச்சகங்களுடன் பல்கிப் பெருகி பத்து அலகுகளுடன் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக எழுச்சியுடன் செயலாற்றி வருகின்றது.

[2015 செப்டம்பர் 14

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், விருத்தாசலம் ஆகிய நகரங்களில் நான்கு கிளை அச்சகங்கள் மற்றும் மதுரையில் இரு கிளை அச்சகங்கள் என ஆறு அரசு கிளை அச்சகங்கள் இயங்குகின்றன.

சென்னையில் அமையப்பெற்றுள்ள மைய அச்சகம் மற்றும் இதர கிளை அச்சகங்களில் மாநிலம் முழுவதுமுள்ள அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், மக்களுக்கான முக்கிய தேவைகளான பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிவங்கள், வாக்காளர் பட்டியல் தொடர்பான படிவங்கள் மற்றும் அரசிதழ்கள் ஆகியன அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழக அரசின் அறிவிக்கைகளை அச்சிட்டு வெளியிடும் பணிகளையும் மற்றும் தனிநபர் தேவைக்காக அவர்களின் பெயர் மாற்றம் செய்தல் போன்ற நிகழ்வுகளை அச்சிட்டு அரசிதழில் வெளியிடும் பணிகளையும் அரசு அச்சகங்கள் செய்து வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசு அலுவலகங்கள் செயல்படுவதற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றை தங்குதடையின்றி இலவசமாக வழங்கி வருவதால், இத்துறை சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது. இதன் பயனாக அனைத்து அரசுத் துறைகளும் பொது மக்களின் மேன்மைக்காக முனைப்புடனும், திறனுடனும் செயலாற்ற ஏதுவாகிறது.

பணியாளர்கள் – ஒரு பார்வை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் மொத்தம் 1483 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுள் 957 நபர்கள் ஆடவர் மற்றும் 526 நபர்கள் மகளிர் ஆவர். இவர்களில் 184 நபர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவர். அவர்களின் விவரம் பின்வருமாறு:—

2015 செப்டம்பர் 14]

வ. எண்	வகைப்பாடு	ஆண்	பெண்	மொத்தம்
1.	கண் பார்வையற்றோர்	87	6	93
2.	காது கேளாதோர்/ வாய் பேச இயலாதோர்	2	–	2
3.	பிற வகையினர்	56	33	89
மொத்தம்		145	39	184

மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பிற்கு அரசு நிர்ணயித்துள்ள 3 விழுக்காட்டிற்கு மேலாக இத்துறையில் 12 விழுக்காடு அளவில் மாற்றுத் திறனாளிகள் பணியமர்த்தப்பட்டு மாற்றுத் திறனாளிகள் நலனில் இத்துறை ஒரு முன்மாதிரித் துறையாக விளங்கி வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை–2

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககமானது பொது நிருவாகம் மற்றும் பணியாளர் மேலாண்மை ஆகிய பணிகளுடன், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டு அரசு அச்சகங்களுக்கான புதிய நவீன இயந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்களை கொள்முதல் செய்தும், அரசு அச்சகங்களுக்குத் தேவையான காகிதங்களை கொள்முதல் செய்தும் அச்சுப் பணிகள் சிறப்புற நடந்தேற வழிவகுக்கிறது. இந்த இயக்ககம் அரசின் அனைத்து வகையான அச்சுத் தொழில்நுட்பத்திற்கான அறிவுரை குழுமமாக செயல்படுகிறது.

இந்திய ஆட்சிப் பணி அலுவலர் பதவி நிலையிலான அலுவலர் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இயக்குநராக பணிபுரிகிறார். அவருக்கு நிருவாகம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஓர் இணை இயக்குநரும், தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஒரு பொது மேலாளரும் உறுதுணையாக உள்ளனர்.

[2015 செப்டம்பர் 14

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தில் 169 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், கீழ்க்காணும் 5 செயல்பாட்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வருகிறது. நிருவாக அமைப்பு முறை "பிற்சேர்க்கை-அ"-வில் வழங்கப்பட்டுள்ளது.

நிருவாகப் பிரிவு	வருவாய்த் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் / இணை இயக்குநர்
தொழில்நுட்பப் பிரிவு	பொது மேலாளர் மற்றும் துணைப் பணிமேலாளர்கள்
கணக்குப் பிரிவு	கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் செலவினக் கணக்கர்
வெளியீடுகள் பிரிவு	உதவி இயக்குநர்
தொழிலாளர் நலப் பிரிவு	தொழிலாளர் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள தொழிலாளர் நல அலுவலர்

2015 செப்டம்பர் 14]

அரசு மைய அச்சகம், சென்னை–79

சென்னை, தங்கசாலையில் இயங்கிவரும் 183 ஆண்டுகள் பாரம்பரியமிக்க அரசு மைய அச்சகம் தற்போது புதிய நவீன ரக இயந்திரங்களைக்கொண்டு இயங்கக்கூடிய மாபெரும் அச்சகமாக உருவெடுத்து இத்துறையின் முக்கிய அங்கமாக பெருமை கொள்ளும் வகையில் இயங்கி வருகின்றது. மைய அச்சகத்தில் அரசின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு வகையான அச்சுப் பணிகள் சிறப்புடனும் திறம்படவும் நிறைவேற்றப்படுகின்றன.

அரசு மைய அச்சகத்தின் நிருவாகம் முழுவதையும் இரு பணி மேலாளர்கள் கவனித்து வருகின்றனர். இவர்களுக்கு அச்சுப் பணியில் துணை புரிய துணைப் பணி மேலாளர் ஒருவரும், ஏழு உதவிப் பணி மேலாளர்களும், நிருவாகப் பணிகளில் துணை புரிய மூன்று உதவி இயக்குநர்களும் உள்ளனர். இயந்திரங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த தளவாடங்களைப் பராமரித்து தொழில்நுட்ப ஆலோசனை வழங்கிட இரு உதவிப் பொறியாளர்களும், வரவு-செலவு கணக்குகளை வரைமுறைப்படுத்த ஓர் உதவி கணக்கு அலுவலர் மற்றும் தொழிலாளர் நலன்களைப் பேண ஓர் உதவித் தொழிலாளர் நல அலுவலரும், பாதுகாப்பு பணிகளுக்காக காவல் துறையின் துணை கண்காணிப்பாளர் நிலையில் பாதுகாப்பு அலுவலர் ஒருவரும் உள்ளனர். அரசு மைய அச்சக வளாகத்தில் மருந்தகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

அரசு மைய அச்சகத்தில் அரசின் கமுக்கப் பணிகளை உடனுக்குடன் அச்சிட்டு வழங்குவதற்கான அதி கமுக்கப் பிரிவும் மற்றும் வரவு-செலவுப் பிரிவும் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள், அரசு விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் விடுமுறையின்றி இடைவிடாது தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

தற்போது, இந்த அச்சகத்தில் மொத்தம் 686 பணியாளர்கள் மூன்று முறைமாற்றுப் பணிகளில் (in three shifts) பணிபுரிந்து வருகின்றனர்.

[2015 செப்டம்பர் 14

அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முன்னுரிமை வாய்ந்த முக்கிய இனங்கள்:

I	மேதகு ஆளுநர் உரை
II	மாண்புமிகு முதலமைச்சர் உரை
III	நிதிநிலை அறிக்கை
IV	அனைத்து தலைமைச் செயலகத் துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை
V	சாதனை விளக்கக் குறிப்பு
VI	வரவு-செலவு ஆவணங்கள்
VII	தமிழ்நாடு அரசிதழ்கள்
VIII	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள்
IX	பல்வேறு சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள்
X	தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள்
XI	தேர்தல் ஆணைய படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச் சீட்டுகள்
XII	மாநில கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள்
XIII	மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள்
XIV	மிகு மந்தண/கமுக்கப் பணிகள்
XV	சட்டவிதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள்
XVI	காலமுறை வெளியீடுகள்
XVII	நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள்
XVIII	வணிக வரித் துறைப் படிவங்கள்
XIX	கருவூலத் துறைப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள்

2015 செப்டம்பர் 14]

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு தலைமை நீதியரசர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைச் செயலாளர் போன்ற உயர் பதவியாளர்களுக்கான கடிதத் தலைப்புத் தாள்கள் மற்றும் காகித உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு எழுதுபவர்களுக்கான சிற்றேடுகள் மற்றும் அறிவுரைகள், அரசுத் தேர்வுகள் மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள்கள் ஆகியன இங்கு அச்சிடப்படுகின்றன. இவை தவிர அனைத்து துறைகளுக்குத் தேவையான காகித உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பிரிவுகளில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பெருமளவு பணிபுரிந்து வருகின்றனர்.

அனைத்து அச்சுப் பணிகளை முனைப்பாகவும், திறமையாகவும் மேற்கொள்ள ஏதுவாக, அச்சுத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

புனரமைப்பு

அரசு மைய அச்சகத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நள்ளிரவு நிகழ்ந்த பயங்கர தீ விபத்தின் காரணமாக அவ்வச்சகத்தின் பிரதான தொழிற்கூடமாகத் திகழ்ந்த 84,000 சதுர அடி பரப்பளவு கொண்ட சிவப்புக் கட்டடம் மற்றும் அக்கட்டடத்திற்குள் நிறுவப்பட்டு இயங்கி வந்த இயந்திரங்கள் அனைத்தும் முழுமையாக சேதமடைந்தன. இருப்பினும், மைய அச்சகப் பணிகளில் தொய்வு ஏற்படாவண்ணம் போர்க்கால அடிப்படையில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின்மூலம் பழைய கட்டடங்களைப் பராமரிப்பு செய்தும், புதிய இயந்திரங்களைக் கொள்முதல் செய்தும், தொழிலாளர்களின் அயராத உழைப்பினால் அச்சுப் பணிகளில் எந்தவித சுணக்கமும் ஏற்படாது அனைத்து பணிகளும் தடையின்றி சிறப்புற செயல்படுத்தப்பட்டன.

[2015 செப்டம்பர் 14

இத்தீவிபத்தினால் சேதமடைந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களைக் கொள்முதல் செய்திடவும், இதர கட்டடப் பணிகளுக்காகவும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.22,64,45,000/- நிதியில் 9,000 சதுர அடியில் புதிய தற்காலிக தொழிற்கூடம் அமைக்கப்பட்டு புதிய நவீன ரக இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், தீ விபத்தினால் முழுவதுமாக சேதமடைந்த சிவப்புக் கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கூட்டடம் கட்ட ரூ.21,59,30,000/- அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், பொதுப் பணித் துறையினரால் கட்டடம் கட்டும் பணி 22-1-2015 அன்று தொடங்கப்பட்டு மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதிதாக வாங்கப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள்

வ. எண்	இயந்திரங்கள்	எண்ணிக்கை
1.	CPC–நான்கு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்	1
2.	கணினியிலிருந்து அச்சுத் தகடு தயாரிக்கும் இயந்திரம்	1
3.	தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம்	1
4.	அதிவேக நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்	1
5.	அதிவேக இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்	3
6.	இரு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்–RA-1	1
7.	ஒரு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்–RA-1	2
8.	காகிதம் வெட்டும் இயந்திரம்	5

2015 செப்டம்பர் 14]

வ. எண்	இயந்திரங்கள்	எண்ணிக்கை
9.	காகிதம் மடிக்கும் இயந்திரம்	1
10.	பளுதூக்கும் இயந்திரம்	1
11.	டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (கருப்பு வெள்ளை)	1
12.	டிஜிட்டல் நம்பரிங் யூனிட்ஸ் (8 ஹெட்ஸ்)	1
13.	டிஜிட்டல் நம்பரிங் யூனிட்ஸ் (4 ஹெட்ஸ்)	1
14.	அதிவேக டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (வண்ணம்)	1
15.	மோனோ யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம்	1
16.	புத்தகம் தைக்கும் இயந்திரம்	2
17.	கம்பியடிக்கும் இயந்திரம்	2
18.	உறை மடிக்கும் இயந்திரம்	1
19.	நிப்பிங் இயந்திரம்	1
20.	ஹார்டு பிரஸ்	1
21.	பிளாட்ஃபார்ம் ட்ராலி	3
22.	கையால் எண் இடும் இயந்திரம்	14
23.	கனரக கம்பியடிக்கும் இயந்திரம்	19
24.	மின்னணு எடை இயந்திரம்	1
25.	ரிம்மிங் இயந்திரம்	2

[2015 செப்டம்பர் 14

அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை–1

அரசு அச்சகங்கள் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பல்வேறு வகை காகிதங்கள், அட்டைகள் மற்றும் இதர எழுதுபொருட்களான தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், படிப்பெருக்கி மை, மைப்படித்தாள், படிப்பெருக்கித்தாள் ஆகியவற்றை கொள்முதல் செய்தும், அச்சகம் தயார் செய்யும் கோடிட்ட தாள்களை சேமித்தும், அனைத்து அரசுத் துறைகளுக்கும் இலவசமாக வழங்கும் மையமாக அரசு எழுதுபொருள் கிடங்கு விளங்குகின்றது. ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் ஓர் உதவி இயக்குநர் உதவியுடன் செயல்பட்டு வரும் இவ்வலுவலகத்தில் 93 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அனைத்து எழுதுபொருட்களும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகளின்படி கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

அச்சுப் பணிகளுக்குத் தேவையான வெள்ளை காகிதங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காப்பியர் காகிதங்கள் ஆகியன தனி நேர்வாக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. சில சிறப்பு வகைக் காகிதங்கள், அட்டைகள், மைப்படித்தாள் மற்றும் படிப்பெருக்கி மை போன்றவை ஒப்பந்தப்புள்ளி கோருவதன்மூலம் வெளிச்சந்தையிலிருந்து ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் ஆகியன தேவைப்படும் துறைகளுக்குக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவைப்படும் எழுதுபொருட்கள், காகிதங்கள் ஆகியவை குறித்த வரையறைகளுடன் தேவைப்பட்டியலின்படி விலை ஏதுமின்றியும், 76 அலுவலகங்களுக்கு முன்கூட்டியே தொகை செலுத்தும் முறையிலும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர தேர்தல் காலங்களில் வாக்குச் சாவடிகளுக்குத் தேவையான அனைத்து எழுதுபொருட்களை கொள்முதல் செய்து, இருப்பு வைத்து அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யும் மையமாகவும் இவ்வலுவலகம் செயல்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 14]

அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை–104

சென்னை உயர் நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் முக்கிய நோக்குடன், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 1923 ஆம் ஆண்டு அரசு கிளை அச்சகம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில், நாள்தோறும் வெளியிடப்படும் உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், வார, மாத வழக்குப் பட்டியல்கள் ஆகியவற்றுடன் உயர் நீதிமன்றம் மற்றும் தமிழகம் எங்குமுள்ள சார்நிலை நீதிமன்றங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியனவும் அச்சிடப்படுகின்றன. இவ்வச்சகம், துணைப் பணி மேலாளரின் தலைமையில் 93 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் (in two shifts) ஓர் உதவிப் பணி மேலாளர் மற்றும் ஓர் உதவிப் பொறியாளர் ஆகியோருடன் இயங்கி வருகிறது. மேலும், இவ்வச்சகத்தில் தமிழ்நாடு அரசிதழ்கள் மற்றும் பணிப் பதிவேடுகள் விற்பனை செய்ய ஒரு துணை விற்பனை நிலையமும் செயல்பட்டு வருகிறது.

அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

1949 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்ற புதுக்கோட்டை அரசு கிளை அச்சகமானது சொந்தக் கட்டடத்தில் 51 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) செயல்படுகிறது. ஆதி திராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், காவல், ஓய்வூதியம், சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகளின் அச்சுத் தேவைகள் இங்கு நிறைவு செய்யப்படுகின்றன. மேலும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இவ்வச்சகம் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

[2015 செப்டம்பர் 14

அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம், 1989 ஆம் ஆண்டு வரையில் அரியமங்கலம் தொழிற்பேட்டையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. பின்னர், 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இந்த அச்சகம், 68 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) செயல்படுகிறது. திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள், அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் பொதுப் படிவங்கள் ஆகியன இங்கு அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் துணைப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அச்சகம், 1981 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 58 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) *செயல்பட்டு வரும் இவ்வச்சகத்தில் வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களின் அரசிதழ்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. பொதுப் பணி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, தீயணைப்பு, தொழில் மற்றும் புள்ளியியல் போன்ற துறைகளுக்கான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் துணைப் பணி மேலாளர் நிலையிலுள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.*

அரசு கிளை அச்சகம், சேலம்

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் சேலம் அரசு கிளை அச்சகமானது 67 பணியாளர்களைக் கொண்டு இரண்டு

2015 செப்டம்பர் 14]

முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) செயல்படுகிறது. சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. கருவூலம் மற்றும் கணக்கு, மருத்துவம் மற்றும் அரசுத் தேர்வுகள் துறைகளின் அச்சுத் தேவைகளை இவ்வச்சகம் நிறைவு செய்கின்றது. பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணி மேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

அரசு கிளை அச்சகம், மதுரை–7

வருவாய், காவல், வணிக வரி, பதிவு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளின் அச்சுத் தேவைகளுக்காக 1976 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த அச்சகம் சொந்தக் கட்டடத்தில் 169 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) செயல்பட்டு வருகின்றது. பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் அரசிதழ்கள் அச்சிடும் பணிகளும் இங்கு செவ்வனே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அச்சகம், இரண்டு உதவிப் பணி மேலாளர்கள் மற்றும் ஓர் உதவி இயக்குநர் ஆகியோருடன் துணைப் பணி மேலாளரின் தலைமையில் இயங்குகிறது.

அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை–23

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் தினசரி, வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்களை அச்சிடும் முக்கிய நோக்கோடு இந்த அச்சகம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வச்சகம், 29 பணியாளர்களைக் கொண்டு, இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (in two shifts) துணைப் பணி மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

[2015 செப்டம்பர் 14

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள்

சென்னை, அண்ணா சாலை, இலக்கம் 110-ல், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்கக வளாகத்தில் அமைந்துள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமானது, உதவி இயக்குநர் (வெளியீடுகள்) அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இதன் கிளை விற்பனை நிலையம், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் செயல்பட்டு வருகிறது.

இவ்விற்பனை நிலையத்தில் அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், சட்டத் தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், பணிப் பதிவேடுகள் முதலியவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இந்நிலையம் இயங்குகிறது. அரசு வெளியீடுகள், அனைத்து மாவட்டங்களிலும் அனுமதிக்கப்பட்ட 32 முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பெயர் மாற்றம் அல்லது மதமாற்றம் செய்ய விழைவோரின் விவரங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகின்றன. தூய தமிழில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.115/-ம், ஆங்கிலத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.415/-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. திருநங்கைகளுக்கான பெயர் மாற்ற அறிவிக்கைகள் கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

2014-2015 ஆம் நிதியாண்டில், தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான வெளியீட்டுக் கட்டணம், அரசிதழ்கள் மற்றும் வெளியீடுகள் விற்பனைமூலம் மொத்தம் ரூ.2,44,95,509/- அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 2012 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை அரசு கிளை அச்சகங்களில் அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவ்வாறு துவக்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்களின்மூலம் 2014-2015 ஆம் நிதியாண்டில் தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான வெளியீட்டுக் கட்டணம், அரசிதழ்கள் மற்றும் வெளியீடுகள் விற்பனைமூலம் திருச்சிராப்பள்ளியில் ரூ.19,47,783/-ம் மற்றும் மதுரையில் ரூ.26,69,293/-ம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 14]

முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்பட்ட இனங்களின் பட்டியல்

முன்னுரிமை அடிப்படையில் 2014-2015 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் குறித்த காலத்தில் செவ்வனே இத்துறையினால் அச்சிட்டு வழங்கப்பட்டன:

வ. எண்	அச்சிடப்பட்ட இனங்களின் விவரங்கள்	எண்ணிக்கை
1.	தேர்தல்-வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு-நீக்கம் தொடர்பான படிவங்கள்	1,33,45,000
2.	தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாள்கள் மற்றும் உறைகள்	1,26,25,000
3.	அரசுத் தேர்வுகள் துறையின் விடைத்தாள்கள், படிவங்கள் மற்றும் உறைகள்	3,30,35,000
4.	வகுப்புச் சான்று அட்டைகள் (5 வகைகள்)	29,74,000
5.	விதைச் சான்று அட்டைகள்	31,00,000
6.	கால்நடைத் துறை படிவங்கள்	68,00,000

தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காக்க தொழிலாளர் துறையிலிருந்து ஒரு தொழிலாளர் நல அலுவலரும், இரு உதவித் தொழிலாளர் நல அலுவலர்களும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஒரு சுகாதார மேற்பார்வையாளரும் பணிபுரிந்து வருகின்றனர்.

தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் குறைகள் உடனுக்குடன் தொழிலாளர் நலன் சார்ந்த சட்டம் மற்றும் விதிகளின்படி தீர்வு செய்யப்படுகின்றன. அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் உள்ளது. இம்மருந்தகத்தில் மருத்துவ அலுவலர், செவிலியர், மருந்தாளுநர்

[2015 செப்டம்பர் 14

ஆகியோர் அயற்பணியில் பணிபுரிகின்றனர். மருந்தகத்தின் மருத்துவ அலுவலர், சென்னை நகரில் உள்ள இயக்கம் உள்ளிட்ட இத்துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்கு சென்று பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றார்.

அரசு அச்சகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசால் பின்வரும் படிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

(அ) இரவு நேரப் படி

இரவு நேரப் படி உயர்த்தப்பட்டு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.25/- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) சீருடை தையற்கூலி

ஆடவருக்கு நான்கு இணை ஆடைகளுக்குரிய தையற்கூலி உயர்த்தப்பட்டு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ரூ.800/-ஆக வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து அச்சகங்களிலும் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு ஊதா நிற மேலங்கிகள் (Overcoat) வழங்கப்பட்டு வருகின்றன.

(இ) சிற்றுண்டிப் படி

சிற்றுண்டிப் படி உயர்த்தப்பட்டு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

(ஈ) இடர் படி

வெட்டும் இயந்திரங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இடர் படி உயர்த்தப்பட்டு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

(உ) வார ஈட்டுப் படி

அரசு மைய அச்சகத்தின் வரவு-செலவுப் பிரிவு மற்றும் அதிரகசியப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வார ஈட்டுப் படி உயர்த்தப்பட்டு மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

2015 செப்டம்பர் 14]

(ஊ) சிறப்பூதியம்

(i) சென்னை உயர் நீதிமன்ற மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அச்சகங்களில் நாள்தோறும் வெளியிடப்படும் வழக்குப் பட்டியல்களை அச்சிட இரவு நேரங்களில் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/- சிறப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(ii) அரசு மைய அச்சகத்தில் வரவு-செலவு மற்றும் அதிரகசியப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தரத்திற்கேற்ப மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் சிறப்பூதியம் ரூ.60/-, ரூ.70/- மற்றும் ரூ.100/- என்பன முறையே ரூ.120/-, ரூ.140/- மற்றும் ரூ.200/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அரசு அச்சகங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் செயல்பாடு

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், அரசு அச்சகத் தொழிலாளர்களின் நலன் கருதி, அரசு மைய அச்சகத்திலும் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்நாணயச் சங்கங்கள், சங்க உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கி வருகின்றன. மேலும், காலவரை வைப்புத் தொகை மற்றும் தொடர் வைப்புத் தொகை ஆகியவற்றின்மூலம் தொழிலாளர்களின் மனதில் சேமிக்கும் எண்ணத்தை ஊக்குவித்தும், நடைமுறைப்படுத்தியும் வருகின்றன.

மனமகிழ் மன்றங்கள்

பணியாளர்களிடையே காணும் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவிக்கவும் மற்றும் பணியிடத்தில் இணக்கமான சூழ்நிலையினை உருவாக்கவும் உதவிடும் வகையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த மனமகிழ் மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.2,00,000/- நிதியானது ரூ.3,00,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை ஆண்டுதோறும் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வாங்கவும் செலவிடப்படுகிறது.

[2015 செப்டம்பர் 14

கூட்டுறவுப் பண்டக சாலை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை கூட்டுறவுப் பண்டக சாலையின்மூலம், குடும்ப அட்டை பெற்றுள்ள, தற்போது பணியாற்றும் பணியாளர்களுக்கும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் சென்னை, அரசு மைய அச்சகத்தில் உள்ள நியாய விலைக் கடையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இந்தப் பண்டக சாலையில் 271 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அரசு அச்சக குடியிருப்புகள் சீரமைத்தல்

சென்னையில் அமைந்துள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கென தனி நேர்வாக, தண்டையார்பேட்டையில் 38.4 ஹெக்டேர் பரப்பளவில் 1962-1963 ஆம் ஆண்டில் A, B மற்றும் C என மூன்று வகைகளில் 300 குடியிருப்புகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட மூன்று வகை குடியிருப்புகளில் B வகை குடியிருப்புகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து சிதிலமடைந்துள்ளதையடுத்து, இக்குடியிருப்பில் வசிப்போருக்கு A மற்றும் C வகை குடியிருப்புகளில் மாற்று குடியிருப்பு வழங்கப்பட்டு, அந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் ஒரு சமுதாயக் கூடம் கட்ட பொதுப் பணித் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பணி நியமனங்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் கருணை அடிப்படையில் நியமனம், வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் நேரடி நியமனம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நியமனம் என இதுவரை மொத்தம் 327 பணியாளர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் தூய்மை, பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகளுக்காக பணியாளர்கள், காவலர்கள், மஸ்தூர்கள், ஓட்டுநர்கள் என மொத்தம் 224 பணியாளர்கள்

2015 செப்டம்பர் 14]

நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

பணியாளர் மற்றும் நிருவாக அமைப்பு

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் நிருவாக அமைப்பு, அச்சகங்களின் விவரங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் ஆகியன 31-3-2015 அன்றுள்ளவாறு பிற்சேர்க்கை "அ" மற்றும் "ஆ"-வில் வழங்கப்பட்டுள்ளன.

புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2014-2015 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்படி பின்வரும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன:

1) 31-10-2013 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த அரசு மைய அச்சகத்தின் சிவப்புக் கட்டடத்திற்குப் பதிலாக அரசு மைய அச்சகத்தில் ரூ.21.59 கோடி மதிப்பீட்டில் புதிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) அரசு மைய அச்சகத்தின் கட்டுமானப் பிரிவினை நவீனமயமாக்கிடும் பொருட்டு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

3) அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் தமிழ்நாடு அரசிதழ்கள், படிவங்கள் மற்றும் இதர இனங்களை தலைமைச் செயலகம், பிற அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்திற்கு தாமதமின்றி எடுத்துச்செல்லும் பொருட்டு அரசு மைய அச்சகத்தின் பயன்பாட்டிற்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமை ஊர்தி வாகனம் ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2014-2015 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்களின்கீழ் ரூ.55.35 இலட்சம் அனுமதிக்கப்பட்டு கீழ்க்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன:

[2015 செப்டம்பர் 14

வ.எண்	இயந்திரங்களின் விவரம்	எண்ணிக்கை
1.	தனித்தாள் ஆப்செட் இயந்திரம் ஆர்.ஏ.1 அளவு	1
2.	டிஜிட்டல் மாஸ்டர் பிரிண்டர் (ஒரு வண்ணம்)	2
3.	பல்வகை செயல்பாடுடைய நிகரி	6
4.	மின்னணு எடை கருவி (சிறியது)	7
5.	தடையற்ற மின்சாரம் வழங்கும் சாதனம் (2 KVA)	1
6.	கனரக வைரோ பைண்டிங் துளையிடும் இயந்திரம்	1

தகவல் பரவலாக்கம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது வளர்ந்துவரும் அறிவியல் தகவல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. இத்துறை குறித்த செய்திகள் மற்றும் விவரங்களை அனைவரும் பெற வசதியாக, இத்துறைக்கென அலுவல் முறை வலைதளம் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவன சரிவு, நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள், பெயர் மாற்றம் மற்றும் மத மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள் ஆகியவை துறையின் http://www.stationeryprinting.tn.gov.in என்ற வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்வலைதளம் மூலம் பொது மக்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து பெறலாம்.

வரவு–செலவு

2015-2016 ஆம் நிதியாண்டிற்கான இத்துறையின் வரவு-செலவு விவரங்கள் பிற்சேர்க்கை "இ"-ல் வழங்கப்பட்டுள்ளது.

2015 செப்டம்பர் 14]

நிறைவுரை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தமிழக அரசின் அனைத்துத் துறைகளின் அச்சுப் பணிகள் மற்றும் எழுதுபொருள் தேவைகளை 183 ஆண்டுகளாக தொய்வின்றி ஊக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் சிறப்புற நிறைவேற்றி வருகிறது. தமிழகத்தின் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசு அலுவலகங்கள் செயல்படுவதற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், வாக்காளர் பட்டியல் தொடர்பான படிவங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை போன்றவற்றின் படிவங்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் மூலமாகவே அச்சிட்டு வழங்கப்பட்டு வருவதனாலும், அரசு அலுவலகங்களுக்கு தேவையான எழுதுபொருட்களை இலவசமாக வழங்கி வருவதனாலும் இத்துறை சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேன்மையான வழிகாட்டுதலின்படி, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு, அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருவதால் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தனது பணிகளை சீரிய முறையில் எழிலுற செயல்படுத்தி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2015 செப்டம்பர் 14

பிற்சேர்க்கை – உ

நிருவாக அமைப்பு

இயக்குநர்



2015 செப்டம்பர் 14]

பிற்சேர்க்கை – ஆ

31-3-2015 அன்றைய நிலையில் பணியாளர் எண்ணிக்கை

வ. எண்	அலகு	அலுவலர்கள்	அமைச்சுப் பணியாளர்	இதர பிரிவு	31-3-2015 அன்றைய நிலையில் மொத்த பணியாளர் எண்ணிக்கை
1.	இயக்ககம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட)	14	111	44	169
2.	அரசு மைய அச்சகம், சென்னை-79	20	91	575	686
3.	அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1	1	32	60	93
4.	அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104	2	10	81	93
5.	அரசு கிளை அச்சகம், மதுரை-7	3	19	147	169
6.	அரசு கிளை அச்சகம், சேலம்	1	11	55	67
7.	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை	1	6	44	51
8.	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி	1	6	61	68
9.	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	1	7	50	58
10.	அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை-23	1	5	23	29
	மொத்தம்	45	298	1140	1483

[2015 செப்டம்பர் 14

பிற்சேர்க்கை – இ

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு, 2015–2016

		(நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்)		
கணக்குத் தலைப்பு		2014-2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2014-2015 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு	2015-2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2058	எழுதுபொருள் மற்றும் அச்சிடுதல்	7,77,932	9,04,821	10,19,724
2059	பொதுப் பணிகள்	6,000	6,000	6,300
4058	எழுதுபொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு	1	2,66,201	1,95,933
	மொத்தம்	7,83,933	11,77,022	12,21,957

TRUTH ALONE TRIUMPHS